செ.வெ.எண்: 176/2018 02.05.2018.

# பத்திரிகைச்செய்தி

தமிழ்நாடு அரசு

பழங்குடியினர் நலத்துறை

**ஏகலைவா பள்ளியில் பழங்குடியின மாணவ/மாணவியர் சேர்க்கை தொடக்கம்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் பழங்குடியின மாணவ, மாணவிகளின் கல்வி நலனை கருத்தில் கொண்டு மாமல்லபுரம் அருகில் உள்ள பட்டிபுலம் பகுதியில் (தற்காலிகமாக) தொடங்கவுள்ள ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடபள்ளிக்கு 2018-2019ஆம் கல்வி ஆண்டிற்கு 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை ஆங்கில வழிக்கல்வி மூலம் (English Medium) பழங்குடியின மாணவ/ மாணவிகள் மட்டும் சேர விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பிக்கும் பழங்குடியினர் இன மாணவ/மாணவிகளுக்கு உணவு, உடை தங்கும் இடம் மற்றும் கட்டணம் அனைத்தும் இலவசம் ஆகும்.

எனவே இப்பள்ளியில் சேர விருப்பமுள்ள மாணவ/மாணவிகள் தனி வட்டாட்சியர் (ஆதிந) காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், திருப்பெரும்புதூர் மற்றும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம் காஞ்சிபுரத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்று பூர்த்தி செய்து மே மாதம் 14ம் தேதிக்குள் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அலுவலக முகவரி-
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலகம்,
காஞ்சிபுரம்.
தொலைபேசி-044-27236655

O/C

மாவட்ட ஆட்சித் தலைவர்
காஞ்சிபுரம்

30/4/18 30/4/18 30/4/18